1969 செப்டம்பர் 12]

## சென்னை நகருக்குக் குடி நீர்த்திட்டம்

* 250 வினா.—திரு. வை. சுவாமிநாதன் :
திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீராணம் ஏரித் தண்ணீரை சென்னை நகருக்குக் கொண்டுவரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) இத் திட்டம் எப்போது செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இதற்கான வேலைகள் தொடங்கிவிட்டன. 1971-ம் ஆண்டு முடிவதற்குள் இத்திட்டம் செயல்படத் தொடங்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. வை. சுவாமிநாதன் : இந்தத் திட்டத்திற்காக இதுவரை எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டத்திற்கு இதுவரை எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது என்ற விவரக் குறிப்பு இல்லை. வேலைகள் துவக்கப்பட்டிருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் விவரங்களைக் கொடுக்க முடியும்.

திரு. என். கிட்டப்பா : வீராணம் ஏரித் தண்ணீரை சென்னை நகருக்குக் குடி தண்ணீருக்காகக் கொண்டு வரும்போது, ஊராட்சிகளுக்கு இல்லாவிட்டாலும் நகராட்சிப் பகுதிகளுக்காவது குடி தண்ணீர் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கனவே இதுபற்றிப் பரிசீலிக்கப்பட்டு அந்தத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டு சென்னை நகருக்கு மட்டுந்தான் கொடுப்பதாக அரசு முடிவு எடுத்திருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, when this scheme fructifies in 1971, what would be the quantum of water that would be available for drinking purposes to the City of Madras?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : 40 million gallons per day.

திரு. சி. கோவிந்தராசன் : வீராணத்திலிருந்து சென்னைக்குக் குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை அமல் நடத்துவதற்காக இங்கிருந்து குழாய்கள் போட்டு வருகிறார்கள். அவ்வாறு குழாய்கள் போடும்போது பாக்டரிகள், கட்டடங்கள் ஆகியவற்றுக்குப் பாதகம் ஏற்படும் நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தச் சிக்கலை அகற்றி குழாய்த் திட்டத்தைக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல் எந்தவித

ஆட்சேபணையும் வரவில்லை. அக்விசிஷன் நடைபெறுவதில் எந்த விதச் சிக்கலும் இல்லை. ஒரு இடத்தில் ஒரு தோட்டத்தை எடுத்துக் கொள்வதைப்பற்றிப் புகார் வந்திருக்கிறது. அதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஆர். நாகசுந்தரம்** : வீராணம் திட்டத்தின் பெருமையைத் தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள இந்த நேரத்தில்தான் மக்கள் அதிகமாக உணருகிறார்கள். ஆகவே, இரட்டிப்பு வேகம் கொடுத்து இந்தத் திட்டத்தை அரசு அமல்படுத்த முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : அதிவேகத்துடன் வேலை நடந்து வருகிறது.

### காவிரி கடைமடைப் பகுதி.

* 251 **வினா.—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் பாசனத்தின் கடைமடைப் பகுதி மழைக் காலத்தில் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப் படுவதை தவிர்க்க அரசினர் எடுத்துக் கொண்ட தீவிர நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : காவிரி கழிமுகப் பகுதியின் கடைமடைப் பகுதியில் ஏற்படும் வடிகால் சிக்கலை அரசு நன்கு உணர்ந்துள்ளது. அது குறித்து முனைப்பாக ஆராய்ந்தும் வருகிறது. இச்சிக்கல் குறித்துப் புலனாய்வு செய்து தகுந்த செயற்குறிப்புகளைத் தயாரிக்க அரசு தனிக்கோட்டம் ஒன்றை ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இக்கோட்டம் தேவையான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. இக்கோட்டம் தயாரிக்கும் திட்டங்களை அரசு ஆராய்ந்து 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கிய தொகைக்கேற்ப ஒப்பளிப்பு வழங்கும். இதற்கிடையில், வடிகால் வசதியை உடனடியாகச் சீராக்க வேண்டிய பகுதிகளில் சிறுபாசனச் சிறப்பு திட்டத்தின் கீழ். குறிப்பிட்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**திரு. என். கிட்டப்பா** : தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் பாசனத்தின் கடைமடைப் பகுதிகளில் விவசாய ஆரம்ப காலங்களில் தண்ணீர்த் தட்டுப்பாடும், மழைக் காலங்களில் வெள்ளமும் ஏற்பட்டு வருகின்ற சூழ்நிலைகளை உடனுக்குடன் கவனித்து ஆவன செய்ய குறைந்தபட்சம் சீர்காழியில் தனி ஏ.இ. போட்டு செயல்படுவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : நான் எற்கனவே சொல்லியதுபோல் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.